NOV 2 1945
VADDUKODDAI, CEYLON

**Rates**
*Inland Subscription:*
Rs. 6 per year. (including postage)
Single copy: 15 cts. (including postage)
*Advertisement:* On application.
*'In Memoriam':* (within 4 inches) Rs. 7-50 per insertion.
*'Order Nisi':* Rs. 5 per insertion.

# THE MORNING STAR

SEE SUPPLEMENT.

Registered as a Newspaper (Established 1841) Published every Friday

VOL. 105 } JAFFNA, FRIDAY, NOVEMBER 2, 1945. { NO. 43.

**Notice**
Please send all editorial correspondence as well as all business matters to Tellippalai. This will ensure prompt attention.

RIGHTEOUSNESS EXALTETH A NATION, BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE.

## NEWS

### LOCAL

**Two Minutes' Silence to be Revived.**
It is learnt that the King has expressed his wish that in order to commemorate on November 11, the wars of 1914—1918 and 1939—45, two minutes' silence should be observed this year throughout the British Empire at 11 a. m. until 11.02 a. m. on that day.

**Request for Central School at Kopay.**
At a special general meeting of the Kopay-Irupalai Parents' Association held at Kopay it was resolved that a request be made to the Director of Education to convert the Kopay Government Practising School to a Central School or a Bilingual School with a primary department attached to it. A Committee of eleven was appointed to go into further details and make representations to the Minister of Education.

**No Textiles for Deepavali**
It is learnt that in spite of the efforts of the Minister of Labour, Industry and Commerce to get the new coupons before Deepavali, the authorities in England have cabled to him that it is not possible to send the coupons by plane but only by steamer. Steps are being taken, it may be recalled, to replace the current cards with new coupon books printed in England because at present there is a substantial number of forged cards out, a large number of which have been bought by Black Market Dealers to send goods under-ground.

**Geology in the Technical College**
A new evening course in Geology providing instruction in the various branches of the science such as Engineering and Economic Geology, Mineralogy, Petrology and Palaeontology has been organised at the Ceylon Technical College by Prof. R. H. Paul, the Acting Director. Mr. K. Kularatnam, M. A., B. Sc., Dipl. Geo; A. G. A.; F. R. Econ. S. is in charge of the course, assisted by Mr. Nicolai Leiter, B. Sc. The part-time services of both lecuturers has been lent to the College by the Ceylon University Council. Mr. Kularatnam was formerly a geologist in the department of Mineralogy while Mr. Leiter who hails from Finland was for some time on the staff of Trinity College, Kandy.

**Jaffna College Alumni Association.**
The Annual Dinner of the above Association was held last Friday night. Covers were laid for about 125. Mr. T. C. Rajaratnam, the President of the Association took the chair. Mr. S. W. R. D. Bandaranayake, Minister of Local Administration, was the chief guest and proposed the toast of the College which was replied by Mr. K. A. Selliah, Acting Principal. In the course of his speech Mr. Bandaranayake said that his endeavours have always been to bring about unity. He expressed the hope that a satisfactory settlement would be arrived at early for in Ceylon there were no great differences that could not be settled. The toast of the guests was proposed by Dr. C. T. Chelliah and was responded to by Dr C. Candiah, Medical Superintendent, Jaffna, Mr. C. R. Wadsworth proposed the toast of the Sister Colleges which was responded to by Mr. V. H. Asaipillai of Jaffna Hindu College. The toast of the Alumni was proposed by Mr. K. S. Arulnandy, Principal, Government Training College, and was replied by Mr. S. R. Kanagasayagam, Advocate.

**V. C. Chairman Feted**
A public reception was accorded last Saturday by the residents of Manipay Parish to Mr. C. Thiagarajah, Chairman, Village Committee, Manipay, on his re-election to that office. Dr. S. Subramaniam, J. P., presided and among those accommodated on the platform were Hon. Mr. S. W. R. D. Bandaranayake, Minister of Local Administration, Mr. E. W. Kannangara, Commissioner of Local Government and Mr. C. Coomaraswamy, Government Agent, Northern Province. Mr. Bandaranayake in offering his felicitations to Mr. Thiagarajah said that Manipay was definitely a most progressive V. C. It was a feature in Ceylon that services of public spirited men do not alway receive the gratitude of the people. Receptions of this sort, said the speaker, were therefore very necessary. Among the other speakers were Mr. E. W. Kannangara, Dr. S. C. Thurairajah, M. O. H., Dr. S. G. C. Mills and Mr. T. Buell, J. P. Mr. R. Gnanasampanthan, Secretary of the Reception Committee presented an Address which referred to the rapid strides made by the Manipay V. C. under the chairmanship of Mr. Thiagarajah and to the services rendered by Mr. Thiagarajah towards Social Welfare in the peninsula.

**Jaffna V. C. Chairmen Confer with Minister for Local Administration.**
A Conference of V. C. Chairmen and other members of the Jaffna District V. C. Association presided over by The Hon. Mr. S. W. R. D. Bandaranaike, Minister for Local Administration was held at the Jaffna Kachcheri on Saturday the 27th ultimo.

Mr. C. Thiagarajah, President of the Association in welcoming the Minister and Commissioner paid a tribute to the Minister for his keen interest in developing local units.

Mr. C. Coomaraswamy, G. A. N. P., Mr. E. W. Kannangara Commissioner and The Hon. Mr S. W. R. D. Bandaranaike addressed the Conference.

Among the many subjects discussed were: Stray Cattle nuisance; ways and means of increasing V. C. Revenue; Amendment of V. C. Ordinance Section 19(6) clarifying word "contract"; Training of V. C. Clerks; Community welfare Centres; Salvage Campaign: Jaffna Lagoon Scheme; Uniformity in Taxation; Conservancy; Health; Charity Relief Committees; Kama Vidhans; Village Surveys; Government Cattle Nuisance.

Mr. A. T. Vethaparanam, Secretary, proposed a Vote of Thanks.

**Northern Province Teachers' Ass'cn.**
At a Special General Meeting of the Northern Province Teachers' Association held on Saturday, the 20th ultimo at the Central College, Jaffna, a scheme of salaries drawn up by the Professional Committee of the A. C. U. T. was discussed. The main principles underlying the proposed scheme are that salaries should be uniform irrespective of the type of school in which a teacher may be employed, and that they should be in parity with salaries of Officers in the Public Service with similar qualifications. The meeting resolved that these should be the basis of the future scheme of salaries.

The following resolutions were also adopted:

1. This Association is of opinion that Senior and Junior Secondary Schools in the Island have the right to substitute primary classes beginning with the Kindergarden in place of the Special Classes already in existence, that if the recent circular of the Director of Education is intended to prevent such substitution, it will cripple schools and deprive them of their usefulness, that it will amount to a violation of the conditions under which schools entered the Free Education Scheme and that it will result in a denial of equality of opportunity to schools and children so affected.
2. This Association requests the Minister to amend the code so that overage pupils who were in schools on 1-10-45 be counted as eligible for a period of five years, that the age of eligibility in the post S. S. C. classes including the Commercial classes be permanently raised by two years and that the girls who were in Boys' Schools on 1-10-45 be recognised as eligible pupils.
3. With a view to raising the standard of efficiency in the Vernacular and Bilingual Schools, this Association submits to the Minister that equipment grant be paid to these schools at the same rate as applies to corresponding departments in English Schools.
4. This Association urges on the Minister to set up an Advisory Board (on the lines of the Burnham Committee) composed of teachers elected by the A. C. U. T., so that it may be consulted on all matters relating the profession, particularly to the Teachers' Salaries and Pensions.
5. This Association disapproves of the system of selective tests before the age of 14 for admission to schools, as much competitive examinations will deny to the pupils equal opportunity and create acute transport problems, and requests the Minister to discourage such tests and to direct schools to take in, in the first instance, children in the immediate neighbourhood irrespective of the standard of intelligence, but without prejudicing the right of denominational schools to give preference to children of their denomination.
6. That all Uncertificated teachers in Service before the Pension Rules came into force be made pensionable.

**Obituary**
Mr. S. P. Muttiah, late Registrar, Births, Deaths and Marriages, Kopay Division, passed away to eternity on the 16th ult. He served the Mission as teacher for 27 years and the Government as Registrar for 27 years. The funeral service was conducted by Canon S. S. Somasundaram and Rev. Sathianathan, Rev. Ben, Muthuvelu and Mr. R. S. Edwards testified to his methodical ways in life and also to his exemplary Christian living.

### INDIAN

The Indian Football Association Team, Bengal, who won the Inter-Provincial Championship this year, has been invited to play five matches in Ceylon in December.

—The Council of the Imperial Indian Citizenship Association has requested the Government of India to furnish the Council with information regarding the position of Indians in Ceylon *vis-a-vis* the proposed constitutional reforms. In the opinion of the Council the Soulbury Commission has entirely ignored the case of Indians in Ceylon as it does not recommend any measure to secure full citizenship rights for one million Indians in Ceylon.

—The Travancore Primary Education Act making Primary Education free and compulsory in the State for children between five and ten years of age has been passed by His Highness the Maharajah of Travancore.

The following resolutions were passed by the members of the Student Christian Movement of India, Burma and Ceylon assembled in Conference at the St. Columbas High School, Chingleput.

1. We welcome Democratic Governments accepting the responsibility for Primary Education through making it universal and compulsory.
2. In implementing this policy, we consider it imperative that the co-operation and contribution of private agencies should not be discouraged but welcomed, both because the State cannot through its own institutions meet the entire educational need of the country and because of the special contribution the private agencies can make to education.
3. In any scheme of such responsibility of the state for education, we consider it essential that Christian agencies should be given the freedom to impart religious education in their schools to pupils who belong to their religion.

## MALAYAN RELIEF FUND

Dear Sir,

I give below a further list of subscriptions received during the past ten days, in aid of the above Fund. Now that an All Ceylon Malayan Relief Fund Committee has been organised, will all sympathisers please send their subscriptions direct to this Committee? I have placed the balance in my hand, in the Bank Ceylon, Jaffna, and will remit it to the Methodist Bishop in Singapore soon as the receipt of the sum of Rs. 1000 sent earlier is acknowledged. I take this opportunity to thank sincerely, all those who responded to my Appeal so graciously.

Yours etc.,
James S. Mather.

Vembadi, Jaffna.
19 10 45.

2nd List of Subscribers:—

| | Rs. cts. |
|---|---|
| Previously Acknowledged | 914 65 |
| Miss A. Symonds | 8 00 |
| Staff & Students Kodai-Kallar Methodist Tamil School | 25 02 |
| Kallar Methodist Church | 36 00 |
| Dr. V. Balasingham | 10 00 |
| Mr. P. R Ariyapooshanam | 5 00 |
| Mr. E. R. T. Reginald | 5 00 |
| Vannarponnai Methodist Church | 40 00 |
| Kalmunai Methodist Church | 82 50 |
| Kalmunai Boys' English School | 43 80 |
| Kalmunai Girls' Boarding School | 140 00 |
| Mr. A. W. Thambiah | 5 00 |
| Batticaloa Town Methodist Church | 19 72 |
| Collected by Rev. E. K. Eliyathamby | 44 00 |
| Mr. M. Thurairajasingham | 10 00 |
| Dr. J. S. Kitto | 5 00 |
| Sums under Rs. 5 collected by Mr. V. Jesuthasan | 48 75 |
| Trincomalee Girls' Bilingual School | 10 00 |
| Akkaraipattu Methodist Church | 21 98 |
| Tirukoil Methodist Church | 17 84 |
| Komari Methodist Church | 13 64 |
| Pottuvil Methodist Church | 13 50 |
| Kaddaively Methodist Church | 3 50 |
| Staff & Students Hartley College, Pt. Pedro | 325 00 |
| Mr. J. S. Thirurajasingham | 10 00 |
| Averankal Methodist Tamil School | 10 75 |
| Evenai Methodist Tamil School | 24 00 |
| Achelu Methodist Tamil School | 39 25 |
| Chenkaladi Friends | 25 00 |
| Point Pedro Circuit | 62 78 |
| Malayan Trading Co. | 5 00 |
| Samuel Sons & Co. | 5 00 |
| Miss V. Sinnathamby | 5 00 |
| Mrs. R. Alagaretnam | 5 00 |
| Mr. S. Sanmugam | 5 00 |
| Mr. R. Thilliampalam | 5 00 |
| R. Chelliah & Co. | 5 00 |
| Sums under Rs. 5 Collected through Kilner Institute, Vannarponnai | 20 00 |
| Total Rs. | 2071 68 |

## WANTED

For Union College, American Ceylon Mission, Tellippalai, under Free Education Scheme, two graduates—London or Ceylon: Science man with Physics and Arts man with History. Salary 'B' Scale.

Apply to the Principal on forms obtainable from the office.

## ORDER NISI

In the District Court of Jaffna

*Testamentary Jurisdiction* | No. 462.

In the matter of the Estate of the late Solomon Mather of Manipay.
Deceased.

Margaret R. Mather of Manipay.
Petitioner

Minors:
1. Julius Mather of Colombo.
2. Nesadurai Mather of Manipay.
3. Victor R. Mather of Colombo.
4. Lily Jebamany Mather of Manipay and
5. Jeyarajah Mather of do.

Respondents.

This matter of the petition of the petitioner coming on for determination before S. S. J. Goonasekara, Esquire, District Judge, Jaffna, in the presence of Mr. W. B. Canagaratna, Proctor on the part of the petitioner and the affidavit of the petitioner dated the 8th day of September 1945 and her petition, having been read,

It is ordered that the abovenamed 2nd Respondent be and he is hereby appointed guardian ad litem over the 5th minor Respondent for the purpose of watching his interest in these testamentary proceedings and that Letters of Administration to the estate of the deceased be issued to the petitioner as widow and an heir of the said deceased unless the Respondents or any other person or persons interested in these proceedings shall appear before this Court on or before the 12th day of November 1945 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

The 4th day of Oct. 1945 — Sgd. S. S. J. Goonesekera, District Judge.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும்; பாவமோ எந்தச்சனங்களுக்கும் இகழ்ச்சி.

# புதினக் குறிப்புகள்

**யாழ்ப்பாணச் சபாசங்க ஊழியர் சமாசம்**

யாழ்ப்பாணச் சபாசங்கத்தைச் சேர்ந்த ஊழியர்களின் Quarterly Meeting சென்ற மாசம் 25 ம் தேதி உடுவிற் சபையைச் சேர்ந்த மண்டபத்தில் 10 மணி போலக் கூடிற்று.

கனம். D. T. நைல்ஸ் ஆரம்ப ஆராதனையை நடத்தினர். ஊழிய சங்கத் தலைவர் பீடம் வகிக்க, சங்கச் செயலாளர் சென்ற கூட்ட வரலாறுகள் வாசித்தனர். சங்கம் அவற்றை ஒப்புக்கொண்டது. "தற்கால அரசியல் சம்பந்தமான இயக்கங்களெல்லாம் சபைக்கோர் கற்தருணம்" எனும் விஷயம்பற்றி, திரு. J. பீற்றரும், திரு. J. J. இரத்தினராஜாவும் வியாசங்கள் வாசித்தனர், மேற்கூறிய விஷயத்தைக்குறித்து, சங்கத்தார் கலந்து சம்பாஷித்தனர். அதன்பின் அபிஷேகம்பெற்ற குருமாரின் சமாசம் நடந்தேறியது.

**இரண்டுதலைச் சுறா மீன்**

கள்ளிக்கோட்டைக் கடற்கரையருகில் அகப்பட்டுள்ளவோர் பெரிய "கலவன்" சுறா மீன் வயிற்றில் இரண்டு தலையுள்ள சுறாமீன் குட்டி காணப்பட்டது. இதற்கு இரண்டு தலைகள், இரண்டு ஹிருதயங்கள், இரண்டு வயிறுகள் இருந்தன. ஆனால் வால் ஒன்றுமாத்திரமாம்.

**அணுப் பிரளயக் குண்டு**

அணுப் பிரளயக் குண்டு அதிக சீக்கிரத்தில் பழையவோர் கதையாகப் போய்விடும். அதன் சக்தியை வெல்லக்கூடிய எதிரான முறைகள் செய்கைமுறையில் விருத்திபெற்று வருகின்றதென ஐக்கியமாகாணக் கடற்படை உதவி லிகிதர் திரு. ஸ்றூம் ஹேன்செல் மொழிந்திருக்கின்றார்.

**பாரிய வேளாச் சுறா**

கீரிமலையைச் சேர்ந்த வலித்தூண்டல் எனும் கிராமத்துக்கப்பால் கடலிலே சென்ற மாசம் 16 ம் திகதி, 18 அடி நீளமும், 11 அடி 9 அங்குல அகலமும், 9 அடி 10 அங்குலச் சுற்றளவுமான பாரிய வேளாச் சுறவொன்றை ஒருவர் பிடித்தனர். 18 பேர் சேர்ந்தும் அதை இழுத்துக் கொள்ள முடியாமலிருந்தது அதினால் அதை வெட்டித் துண்டுகளாக்கிக் கரைக் கெடுத்தனர். அது 180 ரூபாயாக விலைப்பட்டது. சனங்கள் பல இடங்களிலுமிருந்து வந்து அதைப் பார்த்துப் போயினர். (ஈ—பா—ன்)

**இலட்சுமிகாந்தம் கொலைவழக்கு**

இந்த வழக்கின் அப்பீல் விசாரணை சென்ற மாசம் 27 ம் திகதி முடிவாயிற்று. 29 ம் திகதி தீர்ப்புச் சொல்லப்படும்.

**எழுப்புதற் கூட்டங்கள்**

சென்ற வெள்ளிக்கிழமை சாயந்தரம் தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை இரவு வரை தெல்லிப்பழைச் சபையில் விசேஷ எழுப்புதற் கூட்டங்கள் ஆலயத்தில் நடைபெற்றன. திருவாங்கூரைச் சேர்ந்தவரும் தற்போது கெடுக்கீவில் ஊழியஞ் செய்பவருமாகிய சாது Peter அவர்களும், உடுவில் உதவி ஊழியன் திரு. D. P. இளையதம்பியவர்களும் பிரசங்கங்கள் செய்தனர். கனம். D T. Niles போதகரவர்கள் வேதப்படிப்பு நடாத்தினர். ஞாயிற்றுக்கிழமை காலை நடந்த விசேஷ ஆராதனையில் கெடுக்கீவைச் சேர்ந்த ஒருவர் பகிரங்கமாக யேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம்பெற்றனர். ஓர் கூட்டத்தில் கெடுக்கீவு வேலையைக்குறித்துச் சில குறிப்புகளையும் சாது அவர்கள் கூறினர்.

---

## யாழ்ப்பாண மிருகஉணவுச்சாலை
## பெரியதெரு – யாழ்ப்பாணம்

திறமான மிருக உணவு வகைகள் குறைந்த விலையில் எம்மிடம் அல்லது எமது விற்பனை ஏஜண்டுகளாகிய யாழ்ப்பாணம் பெரியகடை காங்கேசன்துறை ரோட்டிலிருக்கும் நடன விலாஸ் கம்பனியாரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை விபரம்

1. அதிக பாலைத் தரும் பசுமாட்டு உணவு 100 இறாத்தல் நம். 1 ரூபா 21.50.
2. மேற்படி பாலைத் தரும் பசுமாட்டு உணவு 100 இறாத்தல் நம். 2 ரூபா 19.50.
3. மேற்படி பாலைத் தரும் ஆட்டு உணவு 100 இறாத்தல் ரூபா 21.50.
4. எருது மாட்டு உணவு 100 இறாத். ரூபா 20.50.
5. அதிக முட்டைகளிடப்பண்ணும் கோழி உணவு 1 இறாத்தல் ரூபா 1.20.
6. கோழிக்குஞ்சுகள் வளர்வதற்கேற்ற தானியம் 5 இறாத்தல் ரூபா 2.00.

43—F

---

**வெடிமருந்தில் நெருப்புப்பிடித்தல்**

கந்தானையில் சென்ற 26 ம் திகதி சம்பவித்த வெடியில் 6 பேர் மரித்தனர். 50 பேருக்கு மேற்பட்டோர் பங்காயப்பட்டனர். 250 யார் சுற்றளவான இடத்தில் அதிக சேதங்கள் ஏற்பட்டன. 27 வீடுகள் முற்றாய்த் தீக்கிரையாயின. நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் சேதப்பட்டன.

ஒரு லொறியில் கொழும்பிலிருந்து நீர்கொழும்புக்கு வெடிமருந்து கொண்டுபோகப்பட்டது. லொறி மரத்திலே மோதப்பட நெருப்பு அதிற் பற்றி, வெடிமருந்திலும் தாவ, பயங்கர சத்தத்தோடு வெடிச்சத்தமுண்டாயிற்று. அட்டார வட்டாரத்திலிருந்த வீடுகளெல்லாம் நெரு புப்பற்றி, அதிக உயிர்ச்சேதமுண்டாயிற்று. பரிதாபமான முறையில் சனங்கள் எல்லாரும் கண்டந் துண்டமாக வீசப்பட்டிருந்தனராம். விசாரணை நடைபெறுகின்றது.

**மழை**

கொழும்பிலே காலநிலை இலாகாவை நடத்தும் Dr. D. T. E. தசைநாயக் என்பவரின் அறிக்கையின்படி: 27 ம் திகதி தொடக்கமாய் 24 மணித்தியாலங்களிலே லபுகமாவில் 9.94 அங்குலம், கழுத்துறையில் 9.17 அங்குல மழையும் பெய்திருக்கின்றது. அநேக வருஷங்களுக்கு இப்போ பெய்திருப்பது அதிகம் பெரிய மழை. இப்படி இன்னும் பெய்கில் தண்ணீர்த் தொட்டி முட்டி வழியும் என்பது.

இப்போது தண்ணீர்ப் பஞ்சம் நீங்கிவிட்டது. வடகீழ்காற்று அடிக்கும்போது மேலும் தண்ணீர் அதிக படுமெனத் திரு. C. M. ஜென்னிங்ஸ் கூறுகின்றார். மழை பல இடங்களிலும் பெய்திருக்கின்றது. ஆனால் சில இடங்களிற் சோனாமாரியாயும், மற்றைய இடங்களிற் குறையவும் பெய்திருக்கின்றது. சில இடங்களிலே பலத்த இடிமுழக்கமுமிருந்தது.

**திரு. பண்டாரநாயகவுக்குப் புகழ்மாலை**

சுன்னாகம் மாக்கெற் கோட்டத்தில் திரு. பண்டாரநாயகவுக்கு வைக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில், அரசாங்கசபை அங்கத்தினராகிய திரு. S. நடேசன் அவர்கள் பின்னே சொல்லப்படும் புகழ்மாலையைத் திரு. பண்டாரநாயகவுக்குச் சூட்டினர்.

அவர் சொன்னது: "புதிய அரசியல் முறை அமுலுக்கு வரும்போது திரு. பண்டாரநாயக அவர்கள் அரசியற் தலைவராக அதி சிரேஷ்டமான இடத்தை எடுப்பாரென நம்பப்படுகின்றது. அரசாங்க சபையின் ஆக்கிங் தலைவராக அவர் கடமையாற்றிய காலத்தில், அவர்மீது சனங்கள் வைத்த நம்பிக்கைக்கு மேற்படக் காரியங்களை நடப்பித்து வந்திருக்கின்றார்" என்பது.

திரு V. தர்மலிங்கம் என்பவரால் ஒரு உபசாரப் பத்திரம் வாசிக்கப்பெற்றது. ஸ்கந்த வரோதயக் கல்லூரி அதிபர் தமது சொற்பொழிவில்: சிங்கள மகாசபையின் தலைவர் இலங்கையின் தெற்கில் தீமை விளைக்கக்கூடிய பேச்சுக்களைப் பேசினதினாற்றான் திரு. G G. பொன்னம்பலம் வடபாகத்தில் பிரிவினைக்குரிய விதையை விதைத்திருந்தார் என்று கூறினார்.

உடுவிற் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவராகிய திரு. W. பொன்னுத்துரையும், திரு. பண்டாரநாயகவைப் புகழ்ந்து பேசினர்.

**இரு நிமிஷ அமைதி மறுபடியும்**

1914—18 இலும், 1939—45 இலும் நடைபெற்ற யுத்தங்களை நினைவுகூரும்படி, முன் நடந்தபடி பதினொராம் மாசம், (நவம்பர்) 11 மணி தொடக்கம் 11 மணி 2 நிமிஷம் வரை இரண்டு நிமிஷங்களுக்கு எல்லாரும் வேலையைவிட்டு அமைதியாயிருக்க வேண்டுமென்பது நமது அரசர் பெருமானின் விருப்பம். றெயில் போக்குவரவும், தண்ணீர் எடுத்தல் விஷயங்களும் தடைபடவொண்ணாது. இராசபக்தியுள்ள எல்லோரும் இதை அனுசரிப்பார்களெனக் காத்திருக்கப்படுகின்றது.

**இலங்கையிற் படிக்க இந்திய மாணவர் விருப்பம்.**

இலங்கையில் இலவச கல்வித் திட்டம் அமுலுக்கு வந்திருப்பதை அறிந்து, பல இந்திய மாணவர்கள் இலங்கைச் சர்வகலாசாலையிற் படிக்க ஏராளமான மனுக்களை அனுப்பியிருக்கின்றனர் எனத் தெரிகிறது. கைத்தொழிற் கல்லூரியிற் சேரவும் பல இந்திய மாணவர்கள் இந்தியாவிலிருந்து மனுச்செய்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாகத் [illegible] வருக்க சர்வ[illegible] பங்கள் செய்துவருகிறார்கள் என அறியக்கிடக்கின்றது.

---

## மலாய்நாட்டில் இருக்கும் இலங்கை வாசிகளைப் பற்றிய விசாரணை

யாழ்ப்பாண அரசாட்சி ஏசண்டரும், காலி அரசாட்சி ஏசண்டரும் தங்கள் கச்சேரிகளில் மலாய் நாட்டில் இருக்கும் இலங்கை வாசிகளைப்பற்றிய எழுத்துமூலமான விசாரணைகள் ஏற்று அவ்விசாரணைகளை மலாய்நாட்டில் இருக்கும் இலங்கை அரசாட்சியாரின் உப பிரதிநிதிக்கு அனுப்புவதற்காக, ஓல்ட் வோட் றெயில்வே ஸ்ரேசன், லோட்டஸ் றோட், கொழும்பில் (The Malayan Ceylonese Enquiry Office, Old Ford Railway Station, Lotus Road, Colombo) இருக்கும், மலாய்நாட்டு இலங்கை வாசிகளைப்பற்றிய விசாரணைக் கந்தோருக்கு அனுப்புவார்கள்.

இவ்விசாரணைகள் யாழ்ப்பாணக் கச்சேரியிலும், காலிக் கச்சேரியிலும் கிடைக்கக்கூடிய இதற்கெனக் குறித்த பத்திரங்களிலே எழுதப்படவேண்டும். ஒவ்வொரு விசாரணைக்கும் மூன்று பிரதிகள் எழுதி அனுப்பவேண்டும்.

இவ்விசாரணைப் பத்திரங்கள் பெற்றுக்கொண்டதைப் பற்றிய மறுமொழிகள், மலாய்நாட்டு இலங்கைவாசிகளைப்பற்றிய விசாரணைக் கந்தோரில் இருந்து அனுப்பப்படும். விசாரணைகளைப்பற்றிய முற்றான பதில்கள் சிறிதுகாலத்தின் பின்னரே எதிர்பார்க்கலாம்.

பிரதம காரியதரிசியின் கந்தோர்,
கொழும்பு,
1945 ம் ஆண்டு அக்டோபர் மீ 19 ம் உ.
43—1


*A smart collection!*

Make your choice now from the lovely new

**BENARES SAREES**

These are now available at very attractive controlled prices.

**No Coupons.**

**LATEST ARRIVAL! FISH NET SAREES**

**NOVELTY SILK STORE**

(The Shop for Novel Selection)

**MAIN ST. JAFFNA.**



**THE SHOP FOR THE BEST BOOKS**

THROUGH OPEN WINDOWS
by Rita F. Snowden— 4 50

CALLING ALL WOMEN
by William J. May— 4 50

EVERY BODY'S CALVARY
by Alan Walker— 4 50

AND A WIDE SELECTIONS OF CHRSTIAN READING

**THE C. L. S BOOK SHOP,**
First Cross Street, Jaffna.



70 வருஷங்களுக்கு மேற்பட்ட அனுபவம் ...



1872 ம் ஆண்டுக்கு முன் இங்கிலாந்திலே முதல் ஹம்பர் துவிச்சக்கரம் செய்யப்பட்டது. ஹம்பர் துவிச்சக்கரத்தில் சிறப்பட்ட வரிகளும், பெலனும், இலேசும இன்று அதனுடைய நீண்ட அனுபவத்தையும் அது செய்கை பண்ணப்பட்ட திறமையையும் காட்டுகின்றது.

ஹம்பர் துவிச்சக்கரத்தின் வரத்து மட்டுப்படுத்தப்பட்டாலும் அதற்குத் தேவையான மறுபகுதிகள் கிடைப்பதனால் ஹம்பர் துவிச்சக்கரத்தை யுடையோர் தொந்தரவு இல்லாமல் அதைப் பாவிக்கலாம்.

**ஹம்பர்**

மில்லர்ஸ் லிமிட்டெட், ஹம்பர் துவிச்சக்கரஏஜண்டுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிமல்குக அன்பு பெருகுக
தேசமெங்கணும் தீமையருகுக
பாசநீக்கிப் பவித்திரமேயருள்
யேசு நாமமேயென்றென்று மோங்கவே

உதயதாரகை

1945ம் ௵ நவம்பர் ௴ 2௳

## சிங்களவர் "நாஷனல்" என்பது எதை?

இப்போ சிலகாலமாகச் சிங்களத் தலைவர்கள் அரசாங்கசபைக் கூட்டங்களிலும், ஏனைய கூட்டங்களிலும் பேசும்போதும், உபந்நியாசிக்கும் போதும் "National Language, National Culture, National dress, National Religion, National Flag என்று சொல்லுவதை இலங்கையிலுள்ள ஏனைய குடிசனர் சிங்களவர் "National" என்று எதைக் கருதுகிறார்களென ஆட்சேபிக்கின்றனர். சில நாட்களின்முன்னர் தாங்கள் "National" என்று சொல்லுவது எது எனபதை இலங்கையிலுள்ளாருக்கு உயர்த்திக்காட்டும் நோக்கத்தோடாக்கும் அரசாங்கசபைக் கட்டடத்தின் மீதும், ஏனைய அரசினர் கட்டடங்களின்மீதும் சிங்களவர் சின்னமாகிய சிங்கத்துவசாரோகணஞ் செய்து, உத்தியோக பூர்வமாய் இலங்கையரசினரின் துவசமாக அங்கீகாரஞ் செய்ததுபோல நடாத்திவிட்டிருக்கின்றனர். சிங்களவரல்லாத வேறு சிலரும் இக்கோரிக்கையை அங்கீகரித்திருப்பதாக அறியக்கிடக்கின்றது.

சென்ற 26ம் திகதி யாழ்ப்பாணக்கல்லூரிப் பழையமாணவர் கூட்டத்தின் போழ்து, அத்தருணத்தில் விசேஷ அதிதியாயழைப்புப்பெற்று வந்திருந்த திரு. S. W. R. D. பண்டாரநாயக்க என்பவர் ஆங்கு நிகழ்த்திய விரிவுரையில் இலங்கை மக்களுக்குட் பல பிரிவாரிருக்கின்றார்கள் எனறும், அப்பிரிவினருக்குள் வித்தியாசங்களில்லையெனச் சாதிக்கத் துணிவது புத்தியீனமென்றும், அப்படி வித்தியாசங்களிருப்பினும் எல்லாப் பிரிவினருக்குள்ளும் ஐக்கியத்தை உண்டாக்குவதே தமது முயற்சியாயிருக்கிறதென்றும் நன்றாகப் பேசிவிட்டார். ஆனால் சிங்களருடைய செய்கையைப் பார்த்தாலோ, சிங்கள அரசாங்கமே அரசாங்கம்; சிங்களமே "National" பாஷை; சிங்களக் கலையே "National", புத்த சமயமே "Natioual" சமயம், சிங்களக் கொடியே "National" கொடி என்றாற்போலக் கிரியை செய்வதாக யூகிக்கக் கிடக்கின்றது.

முஸ்லிம் பறங்கியர் முதலிய ஏனைய சிறுபான்மையோரைப்பற்றிப் பேசாமல் பூர்வீகசாதியாராகிய தமிழ் மக்களைக் குறித்துப் பேசலாம். தமிழரையும் அவர்களது பாஷையையும், அப்பாஷையிலுள்ள இலக்கண இலக்கியங்களையும் சிற்பங்களையும், அவர்கள் ஆட்சி முறைகளையும் எடுத்து விஸ்தரித்துக்காண்பிக்கும்படி முயற்சி செய்வாரில்லை. கண்டி நூதன சாலைக்குப் போய்ப் பார்த்தால, சிங்களர் தங்கள் சாதிக்குரிய மேன்மைகளைக் காட்டுஞ் சின்னங்களையும் பொருட்களையுஞ் சேகரித்து வைத்திருக்கின்றனர். சிங்கள அரசருடைய கிரீடம், சிம்மாசனம் முதலியன காட்சிக்கு வைத்திருக்கின்றனர். தமிழ் மக்களுக்குள் சாதியபிமானம்தேசாபிமானம், சுயமரியாதையுடையாராயுள்ள எல்லோரும் இவற்றைப்பற்றி ஆலோசிக்க வேண்டியதும், அதற்கேற்கக் கிரியை செய்யத் தொடங்கவேண்டியதும் அவசியத்திலவசியம். கண்டியிலுள்ள நூதனசாலை முகப்பில "Nationai Museum" என வரையப்பட்டிருப்பதைப் பார்த்தால், அது சிங்கள "National" நூதனசாலையென்றே கொள்ளவேண்டும். ஏன் "Tamil Matigual Nuseum" (தமிழ்ச் சாதியாரின் நூதனசாலை) என ஆக்கப்படக்கூடாது. அங்கு தமிழரின் கலைகளைக் காட்டும் ஏடுகளையும், புஸ்தகங்களையும், அவர்களின் வீரச் செயல்களைக்காட்டும் சின்னங்களையும், தண்டிகை, பல்லாக்கு, உடைகள், நகைகள் இவற்றையெல்லாஞ்சேர்த்து வைத்து, அவற்றைப் பார்க்கப் போகும் வாலிபர் மனசில் தமிழகத்தின் மான்மியத்தையும், தமிழ்ச்சாதியின் பூர்வீக பெருமையையும் வீரியத்தையும், விசேஷத்தையும் காண்பிப்பதினுல், ஏன் அவர்கள் மனதில் சாதியபிமானத்தையும் வீரச்செயல்களைச் செய்ய ஏவுதலையும் உண்டாக்கக்கூடாது. ஆகையால் இவற்றையெல்லாம் தமிழ் மக்கள் வினைத்து ஏற்ற முயற்சி செய்தல் அவசியம். நமது தமிழ்ச்சாதி எழும்பவேண்டும், முன்னேறவேண்டும். சிங்களர் வகுப்புவாதம் தீயது. ஆனால் சாதியபிமானம் வேண்டியது.

விழிமின்! விழிமின்!!

## மலாயாவிலுள்ள இலங்கையர்

வடமலாயாப் புதினப் பத்திரிகைகளின் தலைமை ஆசிரியராயிருக்கும் திரு. M. சரவணமுத்து என்பவர் மலாயாவிலுள்ள இலங்கையரைப்பற்றிச் சொல்லியிருக்கும் விபரங்கள் இலங்கையிலுள்ளாரின் கண்களைத் திறப்பவையாயிருக்கின்றன. மலாயாவின் சகாயநிதிக்கென பல பகுதியார் கூட்டங்கூடி நிதிகள் சேர்த்துக்கொண்டுவரும் எத்தனங்களைப்பற்றிப் பத்திரிகை நேயர்கள் அறிந்திருப்பார்கள். மலாய் நாட்டைப்பற்றிச் சில வாரங்களின்முன் வந்த செய்திகளெல்லாம் அங்கு வசிக்கும் இலங்கையர் பலவகையான கஷ்டங்களையும் இம்சைகளையுமனுபவித்துவருவதினுல் அவர்களுக்காக வோர் சகாயநிதியை அவசியஞ் சேர்க்கவேண்டுமென ஆபத்து அறிகுறி காட்டிவிட்டன. ஆனுல் அங்குள்ள எங்கள் நாட்டாரைப்பற்றி எங்கள் நாட்டவராய்க் காரியங்களை உண்மையின்படி அறியக்கூடியவராயிருக்கின்ற திரு. M. சரவணமுத்து சென்ற 22ம் திகதி பத்திரிகைகாரருக்குச் சொல்லியவைகள் நமக்குக் கொஞ்சம் மனத் தைரியத்தைக் கொடுக்குமென்பது திண்ணம். மலாய் நாட்டிலே—திரு. சரவணமுத்து சொல்வது—கஷ்டசகாயம்பெறுது தொல்லையிலேயிருக்கும் ஒரு உதாரணத்தைச் சொல்லமுடியாது. ஆகையால் பெரிய எடுப்பாய்ச் சகாயநிதிகளைச் சேர்க்க எத்தனிப்பது முழுதும அவசியமற்றவோர்காரியம். நகர்ப்புறங்களிலே அரசாங்க உத்தியோகத்திலிருந்த இலங்கையர் பிரித்தானிய மிலிற்றேறிப் பகுதியாரால் உதவப்பட்டனர். மூலை முடக்குகளிலே, அதிகஉள்நாடுகளிலேயிருந்த இலங்கையாருண்டு. அவர்கள் தனித்த குடிகளாயிருந்தபடியால் கஷ்டத்துக் குட்பட்டிருந்தார்களென்பது மெய்தான். இலங்கையார் சிலர் குரூரமாய் நடத்தப்பட்டார்களென்பது சிலபல குற்றங்களுக்குட்பட்டவர்களாய் யப்பானியரால் பிடிபட்டவர்கள்தான் அப்படி நடத்தப்பட்டனர்.

இலங்கை அரசாங்க உதவிப் பிரதிநிதியாகிய திரு. A. J. இராசசிங்கம் என்பாரின் அறிக்கையின்படியும், பண உதவிபுரியும்படி 50 பேர்மாத்திரம் கேள்விப்பத்திரம் அனுப்பியிருக்கின்றனர்.

மேலும் Deputy Representative இன அறிக்கையின்படி யப்பானுேடு கூட்டுறவாயிருந்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கையர் பத்துப்பேருடைய நாமங்கள் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும், அவர்களுடைய பெயர்கள் கிட்டின இனத்தாருக்கு அறிவிக்கப்படுமென்றுஞ் சொல்லப்படுகின்றது. இந்த [illegible] த்துக்குக் [illegible] போதும்.

## கடிதம்

ஐயா,

27-10-45 சனிக்கிழமை காலை கணம். ஆர்ச்டீக்கன் அவர்கள் ஆராதனை நடத்த, வெஸ்லி டி சேரம் அம்மானவர்கள் புதிதாகக் கட்டப்பட இருக்கும் உடுத்துறை ஆலய குருமனைக்கு அத்திவாரக்கல் நாட்டினுர்கள். உலகம் முழுதும் வியாபித்திருக்கும் தாய்மார் சங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் குடும்ப வாழ்க்கை என்ற விடயமாக ஓர் உபந்நியாசம் செய்தார்கள். இக்காலக் கிறிஸ்தவ சபைகளின் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் தகப்பன்மாருடன் அளவளாவி அந்நியோந்நியமாகச் சிரித்துப் பேசி வாசித்து ஐக்கியப்படுவது குறைவென்றும், தகாத கூட்டங்களில் சேர்ந்தே உலக அநுபவங்களைக் கற்கிருர்கள் என்றும் அந்த அம்மையாரவர்கள் கூறினுர்கள். தந்தை வேதம் வாசிக்க, தாயும் பிள்ளைகளும் (வேலைக்காரருங்கூட) கூடியிருந்து கேட்டுப் படிப்பதே குடும்பத்தின் அழகென்றும் கூறி, தனக்கு எந்தப் பயபக்தியுள்ள போதகர் வாய்க்கிறதிலும் பார்க்கத் தனது கணவன் (அவருக்கு 60 வயதுக்கு மேல் தனக்கு 58 வயதுக்கு மேல்) வாசிக்கும் வேதவசனங்கள் ஒரு வித்தியாசமான ருசியுள்ளவைகளாக இருக்கின்றன என்றும், நாடோறும் சுமார் 1½ மணித்தியாலங்களை இப்படியான வேதவாசிப்பில் செலவிடுவது வழக்கமென்றும் கூறினுர்கள். தாங்கள் பெற்ற பிள்ளைகள் காவாலிக் கூட்டங்களில் உலக அநுபவங்களைக் கற்கவிடாமல் தாங்களே பிள்ளைகளுடன் நண்பர்போல நடந்து தெய்வபக்தியையும் வாழ்க்கை முறையையும் படிப்பிக்க வேண்டும் என்பதும், குடும்ப அங்கத்தவர்கள் யாவரும் சேர்ந்து வேதப் படிப்பு நடத்த வேண்டுமென்பதும் என் இருதயத்தைத் தொட்டபடியே தந்திருக்கிறேன். இந்த இரண்டும் அரை உயிரிலிருந்து அடித் தொண்டைக்குள் துடித்துக்கொண்டிருக்கும் சபைகட்கு மிக அவசியமான போதனைகள். ஏனெனில், சபையின் அத்திவாரம கிறிஸ்தவ குடும்பங்களே.

க. பே. மு.

## யாழ்ப்பாணக்கல்லூரிப் பழைய மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் கூட்டமொன்று சென்ற 26 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கமாக நடைபெற்றது. ஸ்தோத்திர ஆராதனை திரு. J. J. இரத்தினராஜாவினுல் நடத்தப்பட்டது. அதன்பின் பழைய மாணவர் கூட்டம் Lower School மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. T. C. இராசரத்தினம் தலைமையின்கீழ் நடைபெறலாயிற்று. வழக்கப்பிரகாரமாகப் பழைய மாணவர், மாணவிகளெல்லோரும் கல்லூரித் தலைவரின் இல்லத்துக்குச் சென்று, அவராலும், அவரது பாரியாராலும் சிற்றுண்டி, தேநீர் என்பன வழங்கப்பெற்று உபசரிக்கப்பட்டனர்.

இரா 8 மணிபோல அலங்காரமான ஒற்லி மண்டபத்தில் நூற்றுக்கதிகமான பழைய மாணவர்கள் விருந்தருந்தப் பந்தியமர்ந்தனர். விருந்துக்கு விசேட அதிதியாக அழைப்புப்பெற்றவர் அரசாங்கசபையின் உள்நாட்டு மந்திரியாகிய திரு. S. W. R. D. பண்டாரநாயக என்பவர். சபாநாயகர் மந்திரியாருக்கு வரவேற்புக் கூறுகையில் அவரைக்குறித்துப் பேசி: இலங்கையில் அரசியல் சம்பந்தமாக அவர் அதி விசேஷித்த காரியங்களைச் செய்திருக்கிருரென்றும், அவர் சிங்களரை மாத்திரமல்ல, எல்லாச் சிறுபான்மையோரையும் முன்னேற்றமாய்க் கொண்டுபோகக் கூடியவரென்றும், தலைமை வகித்திருக்கின்ற அவருக்கு அக்கம்பக்கம் நின்று உதவக்கூடியவர்கள் கல்வி விஷயத்தில் விரிந்த மனப்பான்மையாய்ப் பயிற்றப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியார்தானென்றும் குறிப்பிட்டனர்.

திரு. பண்டாரநாயக்க தமது விரிவுரையில்: யாழ்ப்பாணக் கல்லூரி பழைய வட்டுக்கோட்டைச் செமினரியின் தொடர்பான ஸ்தாபனமாக 1823 ம் ஆண்டு ஸ்தாபனம் பெற்றதினுல் இலங்கையின் அதிபூர்வீகமானதென்றும், பல்வகையான மாறுதலின்பின் தற்போதிருக்கும் நிலைக்கெய்தியதென்றும் பேசினர்.

மேலும், இலங்கையிலுள்ளார் எல்லோரையும் ஐக்கியமாக்கவே தான் எத்தனங்கள் செய்கிறதாகவும், வித்தியாசங்களிருக்கிறதென்பது உண்மையானுலும், அவற்றை இப்போவே சரிப்படுத்தி ஐக்கியத்தைக் கொண்டுவரவேண்டுமென்றுந் தமது விரிவுரையிற் கூறினர்.

Drs C T. செல்லையா, C. கந்தையா, திருவாளர்கள். C. R. உவாட்ஸ்வோது, V. A. ஆலிப்பிள்ளை, K. S. அருள்நந்தி, S. R. கனகநாயகம் என்போரும சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அப்புக்காத்து கனகநாயகம் அவர்கள் தமது பேச்சில் யாழ்ப்பாணக் கல்லூரியார் எப்படியும் இலவசக் கல்வி ஒழுங்குக்கு வருதல் அவசியமென்றுங் குறிப்பிட்டனர்.

கல்லூரிப் பாட்டுடன் கூட்டம் சமாப்தியாயிற்று.

நெல்லு வயல் குத்தகைக்கு
அல்லது
விற்பனவுக்கு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு உடுவிற் கோவிற்பற்று சங்குவேலியில் வோக்கைவயல், பாம்பாட்டிவயல் என்று சொல்லப்படும் வயல் கெற்பாப்பு 20. இதிற் சொரியலாய் கால்பங்கு. எல்லை: கிழக்கும் தெற்கும் தண்ணீர் வாய்க்கால். வடக்கு: சிற்றம்பலம் அப்புக்குட்டியினதும் காலஞ்சென்ற உவில்லியம் போலின் உரித்தாளரின ஆதனம். மேற்கு: முருகேசபிள்ளை பெண் லூசிப்பிள்ளையின் ஆதனம். மற்றும் விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

T. H. N. Richards,
Proctor & Notary,
No. 371, Dam Street,
Colombo.

36—10.

## பாவமன்னிப்பைப் பணிந்து வேண்டல்.

(தொடர்ச்சி)

5. அப்பா!நல் ஆரமுதே! அன்பே! என்றன்
ஆருயிரே! அருட்கடலே! அகிலந் தன்னில்
ஒப்பாரு மிலாதிலங்கும் ஒளியே! தூய
உயர்தவமே! உன்மகிமை ஓரா தேழை
இப்பாரில் நிலைகுலைந்தே ஏங்கு கின்றேன்
என்பவந்தீர்ந் தெனையாட்கொண் டேற்றே அன்பாய்
எப்போது தானணைப்பாய் எனக்கோர் வார்த்தை
இதயமது புளகமுற இயம்பு வாயே.

6. கருணையிலேன், பொறுமையிலேன், கனிதல் இல்லேன்
கசிந்தொருவர் நிலையதனைக் கண்டு சித்தம்
உருகியிலேன், உணர்ச்சியிலேன் உண்மை இல்லேன்
உயர்பதவி நாடியுன்றன் ஒப்பில் பாதம்
அருகியிலேன் என்றெனைநீ அன்போ டின்றே
அணைந்தொருசொல அறையாது விட்டா யேல்யான்
கருகிமனஞ் சோர்வேனென் கண்ணே! என்றன்
கண்மணியே! கறையகலக் கசிந்து வாவே.

7. வாவாவென் றெனையழைத்தாய் வந்தேன் அல்லேன்
வருத்தும்மா மாயைதனில மயங்கி நின்றேன்
தேவா!நான் உனைமறந்தும் தேடி வந்தாய்
தெவிட்டாவின் அன்புபொறை, கருணை தம்மைப்
பாவாலும் நாவாலும் பாட நன்று
படிப்பறியேன பண்ணறியேன் பதங்கள் காணேன்
மூவா!கை விட்டுவிடேல், விடிலோ இங்கு
மூழ்குவேன் சஞ்சலத்தில் முற்றும் யானே.

A. B. K.

[illegible]
[illegible]
8-10-45.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

Friday, November 2, 1945.

## CEYLONESE DISTRESS IN MALAYA

What is the naked truth about the condition of our countrymen in Malaya? This is a question that is uppermost in the minds of many people when they read the various reports made available to the public about Ceylonese distress in Malaya. There have been recently three sources of information about conditions in Malaya :

(1) Private letters from individuals.
(2) Mr. Saravanamuttu's report to the Press.
(3) Broadcast Report of Mr. A. I. Rajasingham, Deputy Ceylon Government Representative in Malaya.

Though authoritative in themselves, these three reports of conditions in Malaya have been marred by an absence of clarity which has led to much confusion and chaos. To many, the most nauseating feature of these reports is that they contradict each other in important details leaving the people in a state of suspense regarding the actual state of affairs in Malaya. For instance, while private letters speak of untold sufferings and distress, of sacks being used instead of clothes and of people living on tapioca and sweet potatoes, Mr. Saravanamuttu in his report to the press comes out with a different story and speaks of a liberal rice ration and of shops stuffed with textiles of every description. Mr. Rajasingham, the Deputy Ceylon Representative in Malaya, while confirming what Mr. Saravanamuttu has said goes to the extent of blaming our people for "reading into the letters far more than they were intended to convey." Where are we then with regard to the actual position of Ceylonese distress in Malaya?

In our opinion, a true perspective of the degree of distress in Malaya can be got only by putting these three sources of information together rather than by considering them independently. We have little doubt that all these three reports are genuine to the core. But they differ in details because they are accounts of three different stages or periods in the life of the people of Malaya. These different periods may, for the sake of clarity, be divided as follows:

A. Period of Japanese occupation.
B. Period between the surrender and the re-occupation.
C. Period after the re-occupation.

The apparent contradictions in the reports arise from the fact that each one of them lays stress on one or other of these periods mentioned. For example while private letters from friends and relatives refer to the period of Japanese occupation, Mr. Saravanamuttu's report deals *mainly* with the period between the surrender and the re-occupation and Mr. Rajasingham speaks *entirely* of the period after the re-occupation by the British. Thus it is unfair for us to discredit any one of the Reports available to us as false or teeming with terminological inexactitudes because each one of them deals with some particular period of civilian life in Malaya. That there has been actual distress during the period of Japanese occupation, therefore, no one can deny. To what extent the distress was acute will of course, depend upon the interpretation a person gives to the term 'acute.' Mr. Saravanamuttu says that "the general community in Malaya lived a reasonable normal life during the Japanese occupation." But he admits that "there has been constant nervous tension." This "nervous tension", though it may appear to some to be normal during a period of occupation, may appear to others to be more appalling than famine or pestilence or air raids, to render the period of such tension very acute and intolerable. Again the improvement in the textile position referred to by Mr. Saravanamuttu came in, as he has stated definitely, only during the period between the surrender and the re-occupation while our countrymen in their letters really pictured to us the situation during the period of Japanese occupation when as Mr. Saravanamuttu himself admits strict rationing was enforced by the Japanese and only one yard was allowed for a person for a whole year. It is not surprising that under such circumstances sacks were used to the best advantage. The Report of Mr. Rajasingham is chiefly about the period after the re-occupation by the British and no wonder with every Government servant receiving three months' salary in advance, and other similar concessions and privileges granted, "the rehabilitation and return to normal conditions have been speedy." But this does not imply that there has been no distress before and we feel that Mr. Rajasingham himself has gone on the wrong track when he says that "we have been reading into the letters far more than they have been intended to convey."

We do little justice therefore to the reports of conditions in Malaya if we approach them in the proverbial manner of the six blind men of Hindustan who went to see the Elephant. It is only when we consider the reports together that we see things in their true perspective. But all the same, it is very desirable and imperative that if Reports from Malaya are intended to disseminate correct information about conditions there, they should be more clear and state precisely which of the definite periods we have outlined above, they refer to. An absence of such clarity will end in misinterpretations and sometimes distortion of facts and is certainly more injurious to the cause of our distressed countrymen in Malaya than absence of any information at all about them.

## CORRESPONDENCE

Dear Sir,

I find in a news item in your issue of 26-10-45 that a Service for S. I. U. C. members was held at Chundikuli in a private house and that a Sunday School is to be started. I do not know how far this is a wise policy and a correct procedure. In Jaffna the people belonging to the three Churches—Anglican, Methodist, Congregational—have been very liberal in the past, when they either by marriage, work or for other reasons go to reside in a place, where there is a Church other than the one to which they belonged, without the least hesitation they joined and heartily, the former. Only on special occasions would they sometimes go to the original Church. The husband joins the Church of the wife or the wife that of the husband.

This, I consider, was a very desirable feature in the life of the Christians in Jaffna, whatever more orthodox people may say. And I feel that it is not good to disturb this, especially at a time when Church Union is being envisaged.

The proper thing to do, I think, is for the Pastor of the first Church to hand over "the sheep" to the Pastor of the second, and occasionally enquire about the 'health' of the sheep handed over and even see them for himself. This handing over should be done with regard to those who leave Jaffna for Colombo or other parts of the Island. I do not think it is systematically done now, so that many young people in Colombo, for instance, are unattached and are not shepherded. Whatever the Church may be that is working in the locality, where they come to reside, the Jaffna Pastor should get in touch with the Pastor of that Church.

Yours truly.
A. J. R. V.

### Recommendations of the Soulbury Commission

Sir,

I will be thankful if you can kindly cause publication to be given to the following item in the columns of your esteemed paper.

At its meeting held on the 23rd instant, the Committee of the All Ceylon Tamil Congress unanimously expressed disapproval of the Soulbury Commissioners' recommendations on the matter of:

1. The proposed introduction of British form of Cabinet into Ceylon's future constitution.
2. Representa ion.
3. The rights and status of Indians in Ceylon.
4. The composition and powers of the Second Chamber.

It was further decided to hold a Special Session of the Congress at the Colombo Town Hall on Sunday, 4th November 1945, to consider the Soulbury Report, the present political situation and the Future Constitution of Ceylon.

The Committee is meeting again on the 27th instant to hear Mr. J. G. Rajakulendran, M. S. C., one of the delegates of the Congress Deputation to the United Kingdom, address the members on his mission and to make further arrangements in connection with the Special Session.

Yours faithfully
S. SIVASUBRAMANIAM,
Joint Secretary,
All Ceylon Tamil Congress.

156, Hultsdorp,
Colombo,
26th October, 1945.

### Paddy Growing in Ceylon

Sir,

A Paddy Association has been formed. If this Association would take immediate steps to move the Government to approach the question of paddy growing from the latest and the most up-to-date scientific points of view something substantial would have been done. Not long ago Ceylon bought foreign rice to the tune of Rs. 100,000,000.00 per annum (vide Customs Returns) and Ceylon is a Rice producing country. As five eighths of Ceylon is still uncultivated I hold the view that Ceylon can produce all the rice she needs if scientific cultivation is actually encouraged and practised. In Spain production is 400 fold, in Japan 300, in Italy 280 fold. These are pre-war figures. The U.S.A. and Australia nave taken to scientific rice growing. I do not know the yield figures. The yield in Ceylon is about 40 fold, and does not exceed 80 fold anywhere. The obvious initial step to take is to send Ceylonese Science Graduates with the other necessary qualifications to Spain, Japan, Italy and the U. S. A. to study on the spot and to absorb their methods. We want more rice and for its production the requisites are (a) good seed paddy (b) scientific knowledge, (c) practical training, (d) modern methods, (e) up-to-date implements, (f) health measures, (g) conditions or amenities inducing in the cultivator a sense of well being and (h) reasonable returns for the toilers.

Yours etc.
S. J. C. KADIRGAMAR.

Lalita, Colombo
23-10-45.

### The Ceylon Association of Selangor

Permit me to convey to the Government and people of Ceylon on behalf of the Ceylonese in Selangor our deep and grateful appreciation for the interest taken in our welfare by the prompt despatch of a representative to study local conditions here and afford relief.

Mr. Rajasingam who has already captured the hearts of the Ceylonese by the earnestness and sincerity he has brought to bear on his mission is a worthy son of Lanka and is fortunate to have had the rare opportunity to serve his countrymen.

We are glad that Ceylon has been spared the horrors and ravages of war and that Britain found in her hour of trial a true and loyal Lanka.

We have during the past trying years of Japanese occupation sought to keep ourselves out of the lime light because of suppression, oppression and crafty suasion. The Ceylonese in particular were singled out by the Japanese on more than one occasion as pro British and I was present at a meeting when a Japanese Officer threatened the Ceylonese at the point of the bayonet that if they did not co-operate wholeheartedly they would be interned.

But now all is over with the victorious return of the British to Malaya as the proud conquerors of the ... Expeditionary Forces we can look forward to the future with hope and confidence coupled with enthusiasm.

This Association will be happy to collect and supply information to relatives and friends of those who are in Malaya with whom they are unable to get in touch.

M. W. NAVARATNAM,
President.

Post Box 54,
Kuala Lumpur,
13th October, 1945.

### The Soulbury Report

The third instalment of Mr. J. V. Chelliah's article on the above subject will appear in the next issue. *Ed.*

### NOTICE

Tenders are hereby invited for the supply of 6 new double bullock carts of Jaffna Type.

2. Sealed tenders marked "Tender for supply of bullock carts" in the left hand top corner of the envelope should be sent by registered post to reach the undersigned before 12 noon on Tuesday, 27th November, 1945.

3. Each tenderer should deposit with the undersigned a sum of Rs. 100|- in cash when applying for tender forms. Tender not submitted in the proper form or without the required deposit will be rejected.

4. Tender forms, specification and other particulars can be had on application in writing or personally at my office.

E. J. RAJARATNAM,
for C. Coomaraswamy,
G. A., N. P.

The Kachcheri,
Jaffna, 16th November, 1945.
43—1.

THE
JAFFNA FORAGE STORES
(FORAGE SPECIALISTS)
Main Street, Jaffna

Best Quality Forage at reduced prices.

| | | |
|---|---|---|
| More milk Mixture 100 lbs. | | Rs. 21.50 |
| do do | " | Rs. 19.50 |
| do Goats Food | " | Rs. 21 50 |
| Bull Mixtures | " | Rs. 20.50 |
| Poultry Mash for Layers in 4 lbs. bag | | Rs. 1.20 |
| Chicken Grains in 5 lbs. bag | | Rs. 2.00 |

The above Mixtures and Poultry Food can be had from our Sole Agents.

Messrs The Nadana Vilas,
Kangesanturai Road,
Grand Bazaar, Jaffna

or direct from us,
43-2. PROPRIETOR

### NOTICE

G. A., N. P.. will receive tenders up to 12 noon on

(1) Tuesday, 13 November 1945 for the service of weighing out salt to traders at Chiviyateru, and Thondamanar Salt Stores for the period 1-1-46 to 30-9-46.

(2) Wednesdcy, 14 November 1945 for the supply of the following materials to the salt pans at Chiviyateru, Karanavai, and Vellaipparavai and to the salt stores at Thondamanar whenever required during the period 1-1-46 to 30-9-46 viz.. Naar baskets, ola mats, palmyrah olas, vadali olas, palmyrah stalks, palmyrah posts, alampal and cadjans.

3. Tender forms may be obtained at the Jaffna Kachcheri on the production of a tender deposit receipt for Rs 25 in each case. Further particulars may be obtained from the Jaffna Kachcheri.

T. P. Aruliah,
for G. A., N. P.,

Jaffna,
23-10-1945.

In
Ever Loving Memory
of

**S. K. Arianayagam**
**Promoted to Glory**
**3rd November 1934**

You were in our life our guide
Then you were called to rest,
But still we feel you well be our guide,
In this world to do our rest,

Inserted by his wife and sons
Moor Road,
Wellawatta, 1945

Printed and published for the American Ceylon Mission by Mr. V. Joseph Arianayagam, residing at Tellippalai, at the American Ceylon Mission Press, Tellippalai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org